පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 11 |

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022**

**இஸ்லாம்** Islam

பாடசாலையின் பெயர் : ..............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................

..........................................................................................

நேரம் : **3** மணித்தியாலம்

## விடைகள்

### பகுதி - I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 2 | 21) | 3 | 31) | 1 |
| 02) | 1 | 12) | 3 | 22) | 4 | 32) | 3 |
| 03) | 4 | 13) | 2 | 23) | 2 | 33) | 2 |
| 04) | 2 | 14) | 3 | 24) | 4 | 34) | 1 |
| 05) | 3 | 15) | 2 | 25) | 3 | 35) | 2 |
| 06) | 4 | 16) | 1 | 26) | 2 | 36) | 4 |
| 07) | 4 | 17) | 4 | 27) | 2 | 37) | 3 |
| 08) | 1 | 18) | 3 | 28) | 1 | 38) | 3 |
| 09) | 2 | 19) | 2 | 29) | 2 | 39) | 4 |
| 10) | 1 | 20) | 1 | 30) | 3 | 40) | 1 |

### பகுதி -II

**(01)**

i. அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கை, கழா கத்ர் பற்றிய நம்பிக்கை
ii. கதரிய்யா, ஜபரிய்யா, மு∴தஸிலா, முர்ஜியா
iii. கைத்தொழிலும் பொய் கலவாத வர்த்தகமும்
iv. மொழிப் புலமை, சுதந்திர வேட்கை, வாக்கு மீறாமை, விருந்தோம்பல், வீரம், எளிமை *(ஏதேனும் இரண்டு)*
v. இ∴லாஸ் - உளத் தூய்மை, தவ்பா - பாவமன்னிப்புக் கோரல், வரஉ - பேணுதல், ஸுஹ்த் - பற்றற்ற வாழ்வு, அஸ்ஸப்ர் - பொறுமை, அத்தவக்குல் - பொறுப்புச் சாட்டுதல், அல்ம∴ரிபா - அறிவு, அர்ரிழா - பொருந்திக்கொள்ளல் *(எவையேனும் இரண்டு)*

vi. சுவன வாயில்கள் திறக்கப்படுகின்றன, சுவனம் அலங்கரிக்கப்படுகின்றது, நரக வாயில்கள் மூடப்படுகின்றன, ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர், மலக்குகள் நோன்பாளிகளுக்காகப் பாவமன்னிப்புக் கோருகின்றனர், நோன்பாளிகளின் துஆ அங்கீகரிக்கப்படுகின்றது, ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவு ரமழான் மாதத்திலேயே உள்ளது, நரக விடுதலை கிட்டுகிறது. *(எவையேனும் இரண்டு)*

vii. இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ், இமாம் அபூயூஸுப் ரஹிமஹுல்லாஹ்

viii. அல் கஸ்ரு, அல்ஜம்உ - தொழுகைகளை சேர்த்தல், சுருக்குதல், ஸலாத்துல் கவ்ப் - அச்ச நிலைத் தொழுகை
ix. ஓர் ஆட்டைக் குர்பான் கொடுத்தல், ஹரமிலுள்ள ஆறு ஏழைகளுக்கு உணவு வழங்குதல், மூன்று நாட்கள் நோன்பு நோற்றல்
x. அல்மத்ரஸதுல் அஸர், அல் மத்ரஸதுர் ர.்.யு

**(02)**

i. ஆண்கள் தைக்கப்பட்ட ஆடை அணிதல், மணம் பூசுதல், தலைமுடி, தாடி போன்றவற்றில் எண்ணெய் தேய்ப்பது, உடம்பின் எப்பாகத்திருந்தேனும் முடிகளைக் களைவது, நகம் வெட்டுவது, மணம் முடிப்பது, மணம் முடித்து வைப்பது, தாம்பத்திய உறவில் அல்லது அது தொடர்பான செயற்பாடுளில் ஈடுபடுவது, ஆண்கள் தலையை மறைப்பது, பெண்கள் முகத்தை மறைப்பது, வேட்டையாடுவது, ஹரத்தின் எல்லைகளுக்குள் மரங்களையோ செடிகளையோ வெட்டுதல். *(பார்க்கவும் : பாடநூல் பக்கம் 43)*

ii. *தரம் 10 பாடநூலில் பக்கம் 11ல் குறிப்பிடப்பட்டுள்ள நீரின் வகைகள் அதன் பாயன்பாடுகளுடன் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்*

iii. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வபாத்தின் பின்னர் ஸகீபது பனீ ஸாஇதாவில் ஒன்றுகூடிய அன்ஸாரிகள் தலைவர் தெரிவு தொடர்பாக ஆலோசித்தனர். இச்அசய்தியை அறிந்த ஸஹாபாக்கள் சிலர் அங்கு சென்று அவ்வாலோசனை நிகழ்வில் கலந்துகொண்டனர். அதன்போது அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கலீபாவாக ஏற்றுக் கூடியிருந்தோர் பைஅத் செய்தனர். *(போதுமான அளவு விளக்கி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)*

**(03)**

i. ஸக்காத் கடமையிலிருந்து செல்வந்தர்கள் யாரும் நழுவி விடாதிருக்க இது வழி செய்கிறது, ஏழைகளின் சுயமரியாதை பாதுகாக்கப்படுகின்றது, வறுமை ஒழிப்புக்காகப் பாரிய வேலைத்திட்டங்களை முறையாகத் திட்டமிட்டு மேற்கொள்ளலாம், கவனிக்கப்படவேண்டிய அனைவரையுமே கவனித்துக்கொள்ளலாம், சமூக நலனைப் பாதுகாக்கும் பணிகளிலும் கவனம் செலுத்த முடிகிறது.

ii. நன்மைகளை அழித்துவிடும், அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு தடையாக இருக்கும், சுவனம் ஹராமாக்கப்பட்டுவிடும் *(இது போன்ற பொருத்தமான விடைகள்)*

iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 85,86 ஐ பார்க்கவும்.*

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. பிக்ஹுல் அவ்லவிய்யாத் என்ற அறபுப் பதம் "முதன்மைப்படுத்தப்பட வேண்டியவை பற்றிய சட்டநோக்கு" என்ற கருத்தைத் தருகின்றது. அதனை விளக்கமாகக் கூறுவதாயின், ஒரு முஸ்லிம் முக்கியமானதை விட முக்கியமல்லாதவற்றுக்கோ, மிக முக்கியமானதைவிட முக்கியமானதற்கோ முன்னுரிமை வழங்கக் கூடாது. முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பிற்படுத்த வேண்டியவற்றைப் பிற்படுத்த வேண்டும் பாரதூரமானவற்றை அலட்சியப்படுத்தவும் கூடாது என்பதாகும்.
ii. மூஸா அலைஹிஸ்ஸலாம் - கைத்தடி பாம்பாக மாறுதல், ஈஸா அலைஹிஸ்ஸலாம் - பிறவிக் குருடர்களை குணப்படுத்தல், ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் - கற்பாறையிலிருந்து ஒட்டகம் வெயிப்படல் *(வேறு ஏதேனும் பொருத்தமான விடை இருப்பினும் சரியே)*

iii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 67, 68 ஐ பார்க்கவும்*

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. முஜ்தஹிதுகள் தக்வாவும் நன்னடத்தையுமுள்ள முஸ்லிம்களாக இருப்பதுடன் நுண்மதி, அரபு மொழியில் பாண்டித்தியம், அல்குர்ஆன் ஸுன்னாவில் ஆழமான அறிவு, அவற்றுடன் தொடர்புடைய கலைகளில் நிபுணத்துவம், முஜ்தஹித்களின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முன்னய பிரச்சினைகள் பற்றி தெளிவு முதலான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் *(தரம் 11 - பாடநூல் பக்கம் 88ஐ பார்க்கவும்.)*

ii.

iii. **1. இஜ்மாஉஸ் ஸரீஹ்:-** "தெளிவான இஜ்மாஉ" என இதனை அழைக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் வாழும் அனைத்து முஜ்தஹிதுகளும் ஏகோபித்த முடிவில் உள்ளனர் என்பது அவர்களது வார்த்தைகளின் மூலம் தெளிவாகத் தெரிய வந்திருப்பின் அதனையே இவ்வாறு அழைப்பர். இது இஜ்மாஉல் கவ்லி என்றும் அழைக்கப்படுகின்றது.

**2. இஜ்மாஉல் அக்ஸரிய்யா** பெரும்பான்மையின் முடிவைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது. குறித்த ஒரு பிரச்சினையின்போது முஜ்தஹித்களில் கணிசமானோர் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதையே இது குறிக்கும்.

**3. இஜ்மாஉஸ் ஸுகூதி:** மௌனம் சார்ந்த இஜ்மாஉ என இதனை அழைக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் வாழும் முஜ்தஹிதுகளில் ஒருவரோ, சிலரோ குறிப்பிட்ட பிரச்சினைக்கான முடிவு சம்பந்தமாகத் தமது இணக்கத்தையோ, முரண்பாட்டையோ தெரிவிக்காது மௌனம் சாதித்திருப்பின் அம்முடிவை இவ்வாறு அழைப்பர். இம்முடிவை ஆதாரமாக கொள்ளலாகாது என இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மாலிகி மத்ஹபைச் சேர்ந்த பெரும்பாலான அறிஞர்கள் இம்முடிவை இஜ்மாஉவாகக் கருதுகின்றனர். *(தரம் 10 - பாடநூல் பக்கம் 80ஐ பார்க்கவும்.)*

iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 72ஐ பார்க்கவும்.*

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. *சிறந்த உணவுப் பழக்கம், போதுமான உடற்பயிற்சி, சுத்தம், தேவையான ஓய்வு (தரம் 10 - பாடநூல் பக்கம் 128ஐ பார்க்கவும்)*

ii. குடும்ப உறவு - உதாரணம் : தாய் , பால்குடி உறவு - பாலூட்டிய தாய், திருமண உறவு- மணைவியின் தாய் - வேறு பொருத்தமான உதாரணங்கள் *(தரம் 10 - பாடநூல் பக்கம் 117, 118ஐ பார்க்கவும்)*

iii. உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவத்திற்கான உரிமை, தனி மனித சுதந்திரத்திற்கான உரிமை, நீதி பெறுவதற்கான உரிமை, கண்ணியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை, சொத்துக்களைபட பாதுகாப்பதற்கான உரிமை, மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை *(போன்ற பொருத்தமான ஐந்து உரிமைகள் விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்) தரம் 10 - பாடநூல் பக்கம் 120)*

(2+3+5 புள்ளிகள்)

**(07)**

i. வஹி என்றால் என்ன?, வஹியின் முக்கியத்தும், அதன் வகைகள் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் *(தரம் 10 - பாடநூல் பக்கம் 68,69ஐ பார்க்கவும்.)*

ii. இறுதி நபித்துவம் என்றால் என்ன?, இறுதி நபித்துவத்திற்கான ஆதாரம், போலி நபித்துவம் பற்றிய விடயம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் *(தரம் 11 - பாடநூல் பக்கம் 16,17,18,19ஐ பார்க்கவும்.)*

iii. இஜ்திஹாத் என்பன் கருத்து, வரைவிலக்கணம், முக்கியத்துவம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். *(தரம் 11 - பாடநூல் பக்கம் 87,88ஐ பார்க்கவும்.)*

iv. மஸ்ஜிதுன் நபவியின் தோற்றம், புனரமைப்பு, சிறப்பு போன்ற வியங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் *(தரம் 11 - பாடநூல் பக்கம் 53,54ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)